Directorate of Town and Country Planning,
Chennai – 107.

# Annexure

**Year 2024**

| S. No | Query received | PIO reply / decision | First Appeal received | First Appellate Authority Reply / decision |
|---|---|---|---|---|
| 1 | தகவல் எண்.1<br>வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள் சம்பந்தப்பட்ட புலங்களை கள ஆய்வு மேற்கொண்டு, பின்னர் கள ஆய்வு அறிக்கையுடன் வருவாய்த்துறை ஆவணங்களான சம்பந்தப்பட்ட புலங்களுக்கான புலப்படச்சுவடி நகல், சிட்டா (பட்டா) நகல், பயிர் சாகுபடி அடங்கல் பதிவேட்டின் நகல் ஆகியவற்றை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைத்து அது தங்கள் அலுவலகத்தில் பெறப்படுகிறதா- | நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.9480/2019/TCP-5, நாள் 15.11.2023-ன்படி வேளாண்மைத் துறை அறிக்கையானது Through online Single window portal மூலமாக மனுதாரரால் உத்தேச விண்ணப்பத்துடன் விண்ணப்பிக்கப் பட்டு வேளாண்மைத் துறை இணை இயக்குநர் அவர்களால் பதிவேற்றம் மேற்கொள்ளப்படுகிறது. | கோரிய தகவல்களை விடுத்து திசை திருப்பக்கூடிய தகவல்களை வழங்கி யுள்ளார்கள். மனைப் பிரிவிற்காக கிராம நிருவாக அலுவலரி டமிருந்து பெறப்படும் அடங்கல்களின் உண்மை தன்மையை உறுதி செய்ய நகர் ஊரமைப்பு துறையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் வழிமுறைகளை காட்டும் ஆவணங்கள் வழங்கவில்லை. | இவ்வலுவலகத்தை பொறுத்த மட்டில் மனைப்பிரிவு அனுமதி வேண்டி இணையதளம் வாயிலாக பெறப்படும் விண்ணப்பங்கள் இணையதளம் மூலமே பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மேலும், இணை இயக்குநர், வேளாண்மைத்துறை, தேனி அவர்களிடமிருந்து மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக இணையதளம் வாயிலாக அறிக்கை பெறப்பட்ட பின்னரே இவ்வலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்படுகிறது. |
| 2 | தகவல் எண்.2<br>மேற்காணும் விபரப்படி அடங்கலை (பயிர் சாகுபடி கணக்கு) பொறுத்தமட்டில், சம்பந்தப்பட்ட புலங்களுக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் பேணப்பட்டு வரும் அசல் அடங்கல் பதிவேட்டின் புகைப்பட நகலை (ஜெராக்ஸ் நகல்) சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் / | இதுநாள் வரை பெறப்பட்டுள்ள வேளாண்மை துறை அறிக்கையில் களஆய்வின்படியும், வருவாய் துறை ஆவணமான நடப்பு பசலியுடன் சேர்த்து மூன்றாண்டுகள் தரிசாக உள்ளதற்கான கிராம நிர்வாக | உண்மையான தகவல்களை வழங்கவில்லை. மனைப் பிரிவிற்காக பயன் படுத்தப்படும் புல எண்களுக்குண்டான அடங்கல்களை வழங்க | சம்பந்தப்பட்ட வருவாய் துறை அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட விபரங்கள் மனுதாரர்களால் இணையதளத்தில் விண்ணப்பிக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | மண்டல துணை வட்டாட்சியர் ஆகிய வருவாய்த்துறை அதிகாரிகளிடமிருந்து நேரடியாக பெற்று, அதன் அடிப்படையில் வேளாண்மை இணை இயக்குநர் தனது பரிந்துரையுடன் அறிக்கையை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைத்து அது தங்கள் அலுவலகத்தில் பெறப்படுகிறதா- | அலுவலர் அடங்கலின் அடிப்படையில் அறிக்கையானது பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. | வேண்டிய அதிகாரம் பெற்ற அலுவலர்களிடமிருந்து தான் அடங்கல்கள் பெறப்படுகின்றதா என்பதற்குண்டான தகவல்கள் கிடைக்கவில்லை. | பதிவேற்றம் செய்யப்படுகிறது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. |
| 3 | Query received regarding procedure to do conversion form Agriculture to Non-Agricultural purposes / Industrial | If the site lies in Planning Area, the developments shall be permitted as per Master Plan / Detailed Development Plan use. If the site lies in Non-Planning Area,<br><br>For wet land - No objection certificate from District Collector<br><br>For Dry land - No objection certificate from Agriculture Department. | - | - |
| 4 | For New School Building as per TNCDBR 2019, how much minimum access road width requested. | For New School Building as per TNCDBR 2019, minimum access road width should be 7.0 metre. | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | தொழில் ஆலோசனை கட்டிடம் என்பது என்ன என்ற விவரம் தேவை | அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்: 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 31.01.2020-ல் இதற்கான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. www.tn.gov.in/tcp என்ற இணையதளத்தில் மேற்கண்ட அரசாணைகளை பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. | - | - |
| 6 | ஒரு நபர் பஞ்சாயத்து/ கிராமபுற பகுதியில் விவசாய வகைபாடுடைய நிலத்தை, கட்டிட மற்றும் வணிக பயன்பாடுடைய இடமாக மாற்றம் செய்ய எந்த அதிகார அமைப்பிடம் அனுமதி பெறவேண்டும் என்ற தகவலை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். | விவசாய வகைபாடுடைய நிலத்தை வணிக உபயோக வகைபாட்டிற்கு மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு துறையில் விண்ணப்பித்து நில உபயோக மாற்றம் பெற்றுக்கொள்ள வேண்டும். | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | ஒரு நபர் பஞ்சாயத்து/ கிராமபுற பகுதியில் விவசாய வகைபாடுடைய நிலத்தில் அதன் வகைபாடை மாற்றாமலும், தக்க அதிகார அமைப்பிடமும் அனுமதி பெறாமலும் வணிக நோக்கத்திற்காக திருமண மண்டபம் கட்டினால் மேற்படி செயல் குறித்த எடுக்கப்படும் சட்ட நடவடிக்கையாது? மற்றும் எந்த சட்டத்தின் கீழ் அத்தகைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவலை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். | நகர் ஊரமைப்பு துறையில் உரிய அனுமதி பெறாமல் திருமண மண்டப கட்டிடம் கட்டப்பட்டால் நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57-ன் கீழ் மூடி முத்திரையிடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | - | - |